**MCOP: 43**/2026

Date: 19.08.2026.

ம.சா.2 முருகேசன் , த/பெ.சிவனைந்த பெருமாள்

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

விபத்து நடந்த தேதியானது 20.03.2015ல் நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர். விபத்து நடந்த இடமானது நான் இருந்த இடத்தில் இருந்து சுமார் 1 கிமீ இருக்கும். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் நிறமானது சிவப்பு நிறம் ஆகும். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண். TN 69 AX 5353 ஆகும். போலிசார் என்னை விசாரித்த போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். விபத்தில் காயம் பட்ட நபர் என் மருமகன் ஆவார். நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்கு சம்மன் வந்தது. விபத்தை ஏற்படுத்திய வாகனம் வடக்கிலிருந்து தெற்கு பக்கமாக வந்தது. விபத்து நடந்த நேரம் மாலை சுமார் 4.30 மணியாகும். விபத்து நடந்த இடத்தின் அருகில் பள்ளி கடை ஏதுவும் உள்ளதா என்றால் இல்லை. விபத்து நடந்தது சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேனா என்றால் அளித்தேன். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் விபத்தில் காயம் பட்ட நபர் எனது மருமகன் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்ததை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு நேரடியாக விபத்தை பற்றி எதுவும் தெரியாமல் போலிஸ் சொல்லியதன் பேரில் தான் தெரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

**ஒம்/–L.மகேஸ்வரி,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**